பள்ளிக்கல்வி இணை இயக்குநரின்(நாட்டு நலப்பணித்திட்டம்)செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண். 004210/எம்/இ4/2022, நாள். 27.06.2022

பொருள்: பள்ளிக்கல்வி - மத்திய கல்வி உதவித் தொகைத் திட்டம் - தேசிய வருவாய் வழி மற்றும் திறனறிவுத் தேர்வு (NMMSS) - 2022-2023 - தேர்வு நாள் 05.03.2022- தேர்வு முடிவுகள் வெளியிடுதல் -சார்பு

பார்வை: 1.புதுடெல்லி, மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை சார்பு செயலாளர் அவர்களின் கடிதம் எண். F.No.1-6/2020-SS, நாள். 22.12.2021.

2.தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரின் கடிதம் எண். 000233/NMMSS/2021, நாள். 22.06.2022

------------

பார்வை 1-ல் காணும் கடிதத்தின் படி, 2022-2023 ஆம் கல்வி ஆண்டிற்கான மத்திய கல்வி உதவித் தொகைத் திட்டமான தேசிய வருவாய் வழி மற்றும் திறனறிவுத் தேர்வு (NMMSS Exam) கடந்த 05.03.2022 அன்று எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கு நடைபெற்றது.

பார்வை 2-ல் காணும் கடிதத்தில் மேற்குறிப்பிடப்பட்ட தேர்வில் பங்குபெற்று, கல்வி உதவித்தொகை பெற தகுதியான 5900 மாணவர்களின் தேர்வுப் பட்டியல் மாவட்டம் வாரியாக பெறப்பட்டுள்ளது. இத்தேர்வுப்பட்டியல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் இக்கடிதத்துடன் இணைத்து அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பலாகிறது.

மேலும், இத்தேர்வில் தகுதி பெற்றுள்ள தேர்வர்கள் 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசு அல்லது அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வியை தொடரும் பொருட்டு அவர்களுக்கு மட்டும் இக்கல்வி உதவித்தொகை பெற்று வழங்குவதற்கான அனைத்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மற்றும் மேற்கண்ட உதவித் தொகை பெறுவதற்கு முதலாம் ஆண்டு விண்ணப்பிக்கவும், தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பிக்கவும் சார்ந்த மாணவர்கள் மற்றும் வகுப்பு ஆசிரியருக்கு அறிவுரை வழங்கிடவும் அதனை கண்காணித்திடவும் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தலாகிறது.

இணைப்பு:

1. கல்வி உதவித் தொகை பெற தகுதியான மாணவர்களின் தேர்வுப் பட்டியல்(2022-23)

27.6.22

இணை இயக்குநர்,
நாட்டு நலப்பணித்திட்டம்

27/6

பெறுநர்:

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்.

நகல்

அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக்கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9- அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.